வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஓ.மு.எண் 3219/அ2/2021 நாள் 23.10.2021

பொருள் மெட்ரிகுலேசன் பள்ளிகள் – வேலூர் மாவட்டம் – தமிழ் இணைய கல்விக் கழகத்தில் பாடத்திட்டங்கள் உருவாக்கம் , பாடல்கள் எழுதுதல், பயிற்சி வகுப்புகள் முதலான பணிக்காக வேலூர் மாவட்டத்தில் உள்ள மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களின் விவரம் அனுப்ப கோருதல் – சார்பாக.

பார்வை தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறை கடித ஓ.மு.எண் 4580/ அ1/2021 நாள் 20.10.2021.

பார்வையில் காணும் செயல்முறைகள் ஆணைக்கிணங்க அயல்நாட்டில் வாழும் குழந்தைகளுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகத் தமிழ் மொழி மொழியைக் கற்கும் விதத்தில் நிலை 1 முதல் 5 வரைக்கும் ( 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை ) கலைத்திட்டம், பாடத்திட்டங்கள் மற்றும் பாடங்கள் உருவாக்கும் பணியை, மாணவர்களின் திறனை அறிந்த அனுபவம் வாய்ந்த வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளியில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளது.

எனவே தங்கள் பள்ளியில் பணிபுரியும் அனுபவம் வாய்ந்த தமிழ் ஆசிரியர்களின் விவரங்களை **நேரடியாக கீழ்க்காணும் முகவரியில் உள்ள தமிழ் இணையக்கல்வி கழகத்திற்கு உடன் அனுப்பிட** சார்ந்த மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் / தாளாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**மேலும் ஆசிரியர்களுக்கு பாடங்கள் இறுதி செய்த பின்னர் பாடங்களுக்கான ஊதியம் நேரடியாக தமிழ் இணையக் கல்வி கழகத்தால் வழங்கப்படும் எனவும் தெரிவிப்பபட்டுள்ளது.**

**இணைப்பு**

TVA இயக்குநரின் கடிதம்.

முதன்மைக்கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

தாளாளர்கள் / முதல்வர்கள்.

அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

**நகல்**

**இயக்குநர்,**

**தமிழ் இணையக்கல்வி கழகம்,**

**காந்தி மண்டபம் சாலை, கோட்டூர்,**

**சென்னை – 25 ( தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது,**